LIBRARY
22 DEC 2016
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

## 2011/2012 (May 2016)

## GY 3123 Geography of Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

1. அ. "இந்திய துணைக்கண்டத்திலிருந்து பிரிவுற்ற பகுதியே இலங்கை" இக்கூற்றை ஆதாரங்கள், விளக்கப்படங்கள் துணைக் கொண்டு விளக்குக.
(15 புள்ளிகள்)

   ஆ. இலங்கையின் நிலத்தோற்றம் தொடர்பான கருத்துக்களில் அடம்ஸ், வாடியா ஆகியோரின் கருத்துக்கள் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

2. அ. வானிலை மூலக்கூறுகள் எவையெனக் குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

   ஆ. இலங்கையின் வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சிப் பரம்பலில் காணப்படும் முக்கிய வேறுபாடுகளை தரவுகள், விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக.
(12 புள்ளிகள்)

   இ. வங்காள விரிகுடாப் பகுதியில் ஏற்படும் சூறாவளிகள், அமுக்க இறக்கங்கள் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை உதாரணங்கள் தந்து ஆராய்க.
(08 புள்ளிகள்)

3. அ. இலங்கையைப் பாதிக்கும் இயற்கை அனர்த்தங்களை சமூகப் பொருளாதார தாக்கங்களின் அடிப்படையில் தரப்படுத்திக் காட்டுக.
(04 புள்ளிகள்)

   ஆ. இலங்கை பல்வகை அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவதற்கு அடிப்படையாய் அமைகின்ற காரணிகளை விபரிக்குக.
(09 புள்ளிகள்)

   இ. கடந்த 10 ஆண்டு காலங்களில் வெள்ளப்பெருக்கு அனர்த்தம் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கங்களை உதாரணங்களுடன் விபரிக்குக.
(12 புள்ளிகள்)

4. அ. இலங்கையின் விவசாயத்துறையை விருத்தி செய்ய அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

   ஆ. "இலங்கையின் விவசாயத்துறையில் அதிக வருமானத்தை ஈட்டித்தரும் பயிராக தேயிலை இருந்து வருகின்றது" இக்கருத்தினை ஏற்றுக் கொள்கின்றீரா? ஆதாரங்களுடன் விளக்குக.
(15 புள்ளிகள்)

5. "இலங்கையின் குடித்தொகைப் பண்புகள் சுதந்திரத்தை அ
காலப்பகுதிகளிலிருந்து மாற்றமடைந்து வருகின்றன." இக்கூற்றிற்கான ஆதாரங்
தரவுகளுடன் விளக்குக.

(25 புள்ளிகள்

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. இலங்கையின் இறப்பர் பயிற்செய்கையின் தற்காலப் போக்கு

ஆ. இலங்கையின் நகராக்க பிரச்சினைகள்

இ. இலங்கையின் போக்குவரத்து துறையின் அண்மைக்கால மாற்றங்கள்

(12½ x 2 = 25 புள்ளி